இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 11 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 04 – செவ்வாய்க்கிழமை 20 ஆகஸ்டு 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 11: Thiruvalluvar Year - 2055 - Aavani 04 - Tuesday 20 August 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## வரலாற்றில் அழிக்க முடியாத சாதனைகள் புரிந்து

# தேசியத் தலைவராகத் திகழ்ந்தவர் கலைஞர்!

## கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயத்தை வெளியிட்டு – ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் புகழாரம்!

**சென்னை, ஆக. 20 -**


**“வரலாற்றில் அழிக்க முடியாத சாதனைகளைப் புரிந்து தேசியத் தலைவராகத் திகழ்ந்தவர் கலைஞர் அவர்கள்” என்று ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள், கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயத்தை வெளியிட்டு உரையாற்றும் போது புகழாரம் சூட்டினார்.**

கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயத்தை வெளியிட்டு ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் தமிழாக்கம் வருமாறு:-

நமது நாட்டில் மிகவும் போற்றப்படும் தலைவர்களில் ஒருவர் கலைஞர் கருணாநிதி அவர்கள். அவரது பிறந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு, பெருமையுடனும் மரியாதையுடனும் உங்கள் முன் நிற்கிறேன். இந்தச் சிறப்புமிகு விழாவில் கலைஞருக்கு எனது நெஞ்சார்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறேன். தமிழ்நாட்டைக் கடந்து நாடு முழுவதும் தனது செல்வாக்கைச் செலுத்திய ஒரு மாமனிதர், கலைஞர் கருணாநிதி அவர்கள், இந்தியாவின் தலைசிறந்த அரசியல் ஆளுமை, பண்பாடு போற்றிய தலைவர், சமூக நீதிக்காக இடை விடாது குரல் கொடுத்தவர் அவர்.

**இந்தியாவிற்கே எடுத்துக்காட்டான கலைஞரின் தொலைநோக்குப் பார்வை!**

நண்பர்களே, அவரது வாழ்க்கையையும், பெருமையையும் போற்றும் வகையில் நாம் இங்கு கூடியிருக்கிறோம். இந்த வேளையில், அவரது பொது நலத்தொண்டு தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த நாட்டிற்கும் நன்மையை அளித்துள்ளது என்பதை நினைவுகூர வேண்டியுள்ளது. பன்மைத்துவத்தைப் பேணும் வகையில் அனைத்தையும் உள்ளடக்கிய விதத்தில் ஜனநாயகத்தை முன்னோக்கிச் செலுத்துவதற்கான அர்ப்பணிப்பு உணர்வுடன், ஒரு இந்தியன் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதன் எடுத்துக்காட்டாக அவரது தொலைநோக்குப்பார்வையும் செயல்பாடுகளும் இருந்தன.



சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (18.8.2024) நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவில், ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை வெளியிட, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வின்போது, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொதுத் துறைச் செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

**நாடு முழுவதும் செல்வாக்கு கொண்ட தேசிய ஆளுமை, கலைஞர்!**

கலைஞர் கருணாநிதி அவர்களின் அரசியல் பயணமானது நெகிழ்ச்சியும், உறுதிப்பாடும், மக்களுடன் நெருக்கமான தொடர்பும் கொண்ட ஒரு வரலாறு எனலாம். தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஐந்து முறை பொறுப்பு வகித்த அவரது பதவிக்காலத்தில் சவால்கள் இருந்தபோதும் இந்திய அரசியலின் மைய நீரோட்டத்தில் பயணித்து, ஏழை எளிய மக்களின் தேவைகளைத் தீர்த்துவைத்தவர் அவர். அவர் ஒரு மாநிலத் தலைவர் மட்டுமல்ல, நாடு முழுவதும் செல்வாக்கு செலுத்திய ஒரு தேசிய ஆளுமையாகத் திகழ்ந்தார்.

தமிழ் அடையாளத்தில் ஆழமாக வேரூன்றியிருந்த போது, இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு குழிபறிக்க, பிராந்தியவாதம் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. இந்திய ஜனநாயகத்தின் பலம் பல்வேறு குரல்கள் மற்றும் அடையாளங்களுக்கு இடமளிக்கும் திறனில் உள்ளது என்பதை அவர் புரிந்துகொண்டார். தேசிய அரசியலில் அவரது பங்கேற்பு, கூட்டணி அரசாங்கங்களில் அவரது பங்கு, மற்றும் அரசியல் முழுவதும் இந்திய பன்முகத்தன்மை என்ற கருத்துக்கு அர்ப்பணிப்புள்ள தலைவர்களுடனான அவரது தொடர்பு ஆகியவை கொண்டாடப்படுகின்றன.

**‘வேற்றுமையில் ஒற்றுமை’ எனும் புரிதலுக்கு கலைஞரின் ஆதரவு முழக்கம்!**

நண்பர்களே, நான் விவரித்த ‘இந்தியா என்பது வேற்றுமையில் ஒற்றுமை காண்பது’ என்ற புரிதலில்தான் கலைஞர் கருணாநிதி அவர்களின் கூட்டாட்சிக்கான ஆதரவு முழக்கம் வேரூன்றியிருந்தது. பல்வேறு குரல்களுக்கும், பண்பாடுகளுக்கும் அடையாளங்களுக்கும் இடமளிப்பதே இந்திய ஜனநாயகத்தின் பலம் என்பதை அவர் உணர்ந்திருந்தார். மாநில சுயாட்சியை அவர் வலியுறுத்தியபோதும், சமமான அதிகாரப்பரவலை அவர் ஒன்றியம் என்னும் குடைக்குக் கீழேயே கோரினார்.

கூட்டாட்சிக்கான அவரது கடப்பாடு இந்தியத் தன்மையின் முதன்மைக் கூறாகும். இந்தியாவின் பன்முகத்தன்மை அதன் பலம், கூட்டாட்சி அமைப்பு இந்தப் பன்முகத் தன்மையை ஓர் ஒருங்கிணைந்த கட்டமைப்பிற்குள் மலரவைக்கிறது. கூட்டாட்சியைப் பொறுத்தவரை கலைஞர் கருணாநிதி அவர்களின்


தொடர்ச்சி 4 ஆம் பக்கம்


## தமிழ்நாட்டின் திசையைத் தீர்மானித்தவருக்கு இந்தியாவே வருகை தந்து சிறப்பித்திருக்கிறது!

# இப்போது இங்கு நடப்பதும் கலைஞரின் ஆட்சியே!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஆக. 20 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது “தமிழ்நாட்டின் திசையைத் தீர்மானித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கு இந்தியாவே வருகை தந்து சிறப்பித்திருக்கிறது” என்றும், “இப்போது இங்கு நடப்பதும் கலைஞரின் ஆட்சியே” என்றும் பெருமிதத்துடன் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (18.8.2024) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு :-

**‘நா நயம்’ மிக்க தலைவரை இன்று இந்தியாவே கொண்டாடுகிறது!**

என்னுடைய உணர்வுகளை எப்படி விவரிப்பது என்று சொல்ல முடியாத மகிழ்ச்சியில் நான் இப்போது இருக்கிறேன்.

நம்மை எல்லாம் ஆளாக்கிய தலைவரைச் சிறப்புச் செய்யும் வகையில் நாணயம் வெளியிடப்படுகிறது.

‘நாநயம்’ மிக்க தலைவரான கலைஞருக்கு, நாணயம் வெளியிடப்படுவது மிகமிகப் பொருத்தமானது.

**நூற்றாண்டு விழா நாயகருக்கு 100 ரூபாய் நாணயம் வெளியிடப்படுகிறது. இதுவரை நாம் கொண்டாடினோம், இதோ இந்தியாவே கொண்டாடுகிறது என்பதன் அடையாளம்தான் இந்த விழா. இதுபோன்ற எத்தனையோ சிறப்புகளுக்குத் தகுதியானவர் தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! உலகம் இன்று ஒப்புக் கொண்ட உண்மை!**

தமிழ்நாடு சட்டமன்றத்தில், தலைவர் கலைஞர் அவர்களது திருவுருவப் படத்தை, அன்றைய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

ஓமந்தூரார் வளாகத்தில் உள்ள திருவுருவச் சிலையை, அன்றைய குடியரசுத் துணைத் தலைவர் வெங்கய்ய நாயுடு அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அண்ணா அறிவாலயத்தில் அமைக்கப்பட்ட திருவுருவச் சிலையை அன்னை சோனியா காந்தி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

முரசொலி அலுவலகத்தில் அமைக்கப் பட்ட திருவுருவச் சிலையை, மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இன்று தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் உருவம் தாங்கிய நாணயத்தை, நமது நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் வெளியிட வருகை தந்துள்ளார்கள்.

**கலைஞர் நாணயம் வெளியிட – பாதுகாப்புத் துறை அமைச்சர் வருகை, மிகமிகப் பொருத்தமானது!**

இந்திய ஜனநாயகத்தின் பாதுகாவல் அரணாக இருந்த தலைவர் கலைஞர் அவர்களின் உருவம் தாங்கிய நாணயத்தை வெளியிட, இந்திய நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் வந்திருப்பது மிகமிகப் பொருத்தமானதுதான்.



சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (18.8.2024) நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழாவில், ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை வெளியிட, அதனை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

எண்பது ஆண்டு காலம் பொதுவாழ்க்கையில் இயங்கி, அதில் அரைநூற்றாண்டு காலம், தமிழ்நாட்டின் திசையைத் தீர்மானித்த தலைவர் கலைஞருக்கு, இந்தியாவே வருகை தந்து சிறப்பித்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

தலைவர் கலைஞர் நிறைவடைந்த நாள் முதல், நாள்தோறும் அவர் புகழைத்தான் போற்றிக் கொண்டிருக்கிறோம். கடந்த ஓராண்டு காலமாக அவரது நூற்றாண்டை முன்னிட்டு, அவரது சாதனைகளைச் சொல்லும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினோம்.

தலைவர் கலைஞரைப் போற்றும் விதமாகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தினோம். அவற்றில் முத்தாய்ப்பான சிலவற்றை மட்டும் சொல்ல வேண்டு மென்றால்,

- **கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை!**
- **மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்!**
- **1 கோடியே 15 லட்சம் மகளிர், மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை பெறும் ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’!**
- **கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்!**

இந்தப் பெருமைக்கெல்லாம் மகுடமாக, இன்று கலைஞர் உருவம் தாங்கிய நாணயம் வெளியிடப்படுகிறது.

I thank the Union Government for approving the release of the 100-rupee coin in honour of Thalaivar Kalaignar. I also thank Hon’ble Prime Minister Thiru. Narendra Modi for his support and Hon’ble Defence Minister Rajnath Singh for gracing this occasion.

Though he started his career as a professor of physics, due to his interest in politics and by his hardwork, he grew step by step, from MLA to State Minister to CM of Uttar Pradesh and now as the Defence Minister of India.

Hon’ble Rajnath Singh was my first choice to invite for this event.

Although we have different political views, Rajnath Singh has always been someone who maintains positive relationships with people from different political backgrounds.

**நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி, கலைஞர்!**

இன்றைக்கு நாம் பார்க்கும் நவீன தமிழ்நாட்டை உருவாக்கிய சிற்பி, தலைவர் கலைஞர் அவர்கள்தான்!

அவர் உருவாக்கிய கட்டமைப்புகளைப் பட்டியலிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு நாள் போதாது.

அவரது சாதனைகளைச் சொல்ல,


தொடர்ச்சி 4 ஆம் பக்கம்